REG. NO. M. 2997.

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்:
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichéry.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. | புதுவை, யுவ ௵ வைகாசி ௴ ௨௪ ௳ (6—6—35) | NO. 28.

## திருமந்திரம்.

ஆறி யிருந்த வமுத பயோதரி
மாறி யிருந்த வழியறி வாரில்லை
தேறி யிருந்துநற் றீபத் தொளியுட
னூறி யிருந்தன ளுள்ளுடை யார்க்கே.

அடுக்குந் தாமரை யாதி யிருப்பிட
மெடுக்குந் தாமரை யிலக்கத் துள்ளது
மடுக்குந் தாமரை மத்தகத் தேசேல
முடுக்குந் தாமரை முச்சதி ரத்ததே.

முச்சதி ரத்தே யெழுந்த முளைச்சுட
ரெச்சதி ரத்து மிடம்பெற வோடிடக்
கைச்சதி ரத்துக் கடந்து ளொளிபெற
வெச்சதி ரத்து மிருந்தன டானே.

அம்பன்ன கண்ணி யரிவை மனோன்மனி
கொம்பன்ன நுண்ணிடைக் கோதை குலாவிய
செம்பொன்செய் யாக்கை செறிகமழ் நாடொறு
நம்பனை நோக்கி நவிலுகின் றாளே.

மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயன்றரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போகத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே.

தரித்திருந் தாளவ டன்னொளி நோக்கி
விரித்திருந் தாளவள் வேதப் பொருளைக்
குறித்திருந் தாளவள் கூறிய வைந்து
மறித்திருந் தாளவள் மாதுநல் லாளே.

உ

திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை
யுவ ஹூ வைகாசி மீ 24 உ

## சிவத்தைப்பேணில் தவத்திற்கழகு.

ஔவையார் அருளிய "கொன்றைவேந்தன்" என்னும் தமிழ் மந்திரக் கொத்துள் ஒன்றாகிய இவ் அமுத வாக்கியம் உலகியலோடு உண்மை நிலையாகிய பாரமார்த்திகத்துக்கும் உரியதாகின்றது. பாரமார்த்திகப் பொருளோ எனின், உலகோர் தமது படிப்பு வல்லபத்தால் அறிய முடியாத அரிய வேத ரகசியமாகி அமைந்துள்ளது. இம் மந்திரம் இருவகை நிலைக்கும் உரியதாதல் ஒரு சிறிது விளக்கமுற உரைக்கப்படுகின்றது.

முதற்பொருளாகிய சிவம் என்னும் செம்பொருளை ஒருவன் வழிபட்டால் —தன்னகத்து ஆக்கமுறச் செய்தால், அஃதே அவன் தவத்துக்கு அழகாகும் என்பது இதன் பொருளாகும். சிவ வழிபாடே — சிவத்தைப் பேணுவதே — தன்னகத்து — தன் உடலகத்து ஆக்கமுறச் செய்வதே, சிறந்த தவம் என்பது கருத்து. உலகத்திலே சைவ சமயத்தவர் எனப் பேசப்பட்டு விபூதி முதலிய சின்னங்களை அணிதல், தீக்ஷை பெற்றுச் சந்தியா வந்தனம், மந்திர செபம், தோத்திர பாராயணம், ஆலய வழிபாடு. பூசை முதலியன புரிதல், தலயாத்திரை, தீர்த்த ஸ்நானம், மூர்த்தி வழிபாடு, சிவாலயத் திருப்பணி, குரு பூசை — அன்ன தானம் முதலியன புரிதல், பட்டினியிருந்து விரதங்களை அநுட்டித்தல், படிப்பு வல்லபத்தால் புராண படனம், சாத்திர படனம், சமய நூல்களை யாத்தல், பிரசங்கம் முதலியன புரிதல், ஆசாரியாபிஷேகம் பெற்றுச் சிவாலயக் கிரியை முதலிய கிரியைகளை உஞற்றுதல், முன்னிலைகளை வெறுத்து ஒருபால் ஒதுங்கித் "துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை"யராய் — அருந்தல் பொருந்தல்களை ஒழித்து வாயோடு கண் மூடி ஓராங்கு வீற்றிருத்தல், உபாசனை வலியால் — மன வலியால் (will power) மருட் சித்திகளை உஞற்றுதல் முதலிய நடை நொடி பாவனைகளை உடையோரைச் சிவம் பேணும் தவமுடையார் எனவும், சிவம் பேணிய பெரியார் எனவும், மெய்கண்ட மேலோர் எனவும் போற்றுவது பெருவழக்கு. இவரெல்லாம் விதி என்னும் மாயை வலைப்பட்டு இறந்து போனதும் முத்தியடைந்தவர் — சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களுள் ஒன்றையாவது அடைந்தவர் எனவும் (இவற்றின் பொருள் அறியாத) உலக மாக்களால் போற்றப்படுவர். இன்னோர் வேடங்களாலும் நடை நொடி பாவனைகளாலும் சிவம் பேணிய தவம் உடையார் — சிவம் பேணிய பெரியார் என உலகமாக்களுக்குத் தோன்றினும், வாய்மையில் சிவம் என்னும் செம்பொருள் இவரால் பேணப்படவில்லை — இவர்பால் ஆக்கமுறவில்லை என்பது வெள்ளிடையாம். ஏன்? இவரது அசுத்தம் மலிந்த மருளுடம்பில் சிவம் பேணப்பட முடியாது — ஆக்கமடைய முடியாது — குடிபுக முடியாது அச்சரீரத்தை விட்டுப் பிரிய, அச் சரீரம் அவமாய் — சவமாய் விழ இவர் இறந்துபட்டமைபால் என்க. இவரைச் சிவம் பேணிய பெரியார் என்பது உலகியலாகிய போலி வழக்கே — உபசார வழக்கே யாகும். உலகியலுக்கு ஒப்பச் சிவம் பேணும் தவம் என்னும் போலி வழக்கு இதுவே ஆம்.

உலகில் பொரும்பாலார் — எத்தனையோ கோடியில் ஒருவர் ஒழிய மற்றையோர் எல்லாம் லௌகிகப் பயன் கருதியே — லௌகிக சித்திகளைக் குறித்தே கடவுள் வழிபாடு புரிவர்; விரத முதலியன அநுட்டிப்பர் — தவம் புரிவர் — பிற தருமங்களும் உஞற்றுவர். இன்னோரன்ன கருமங்கள் — வழிபாடுகள் எல்லாம் உரிய காலத்தில் அவ்வப் பயன்களை அளித்து ஈற்றில் உண்மையை நாடுதற்குக் காரணமாய் அமையும். அஃதாவது புண்ணிய சென்மம் ஒன்றில் வீடுபேற்றை அவாவிச் சிவம் பேணும் வாய்மையான தவம் புரிதற்குக் காரணமாகும் என்பது. அன்றி இவ் வழிபாடுகளே சீவர்களை நேரே முத்தி வாயிலில் சேர்ப்பிக்கமாட்டா என்பது வெள்ளிடை. உலகியலாகிய வழிபாடுகள் எல்லாம் வாய்மையாகச் சிவம் பேணப்படுதற்கு உரியன ஆகா; சீவர்கள் தங்கள் முனைப்பால் கண்டு பிடித்து அநுட்டிக்கும் கிரியைகளால் — வழிபாடுகளால் "உற்ற ஆக்கையின் உறுபொருள்" ஆகிய சிவம் பேணப்படுதல் முடியாத காரியமேயாகும். சிவம் பேணப்படும் தவத்தை அவாவுவோர் லௌகிகப் பயன் கருதாது பிறவிப் பிணிக்கு அஞ்சி வீடு

பேற்றை விழைந்து அன்பு மாத்திரையால் வழிபாடுகள் புரிய வேண்டும். அன்புநெறி தழுவிய இத்தகைய வழிபாடுகளே குருவருளால் வாய்மையான தவம் உடையராய் — சிவம் பேணும் பெரியராய் நித்தியத்துவம் பெறுதற்கு நேரே வாயிலாகும்.

## கருவூர்த் தேவர் திருவிசைப்பா.

தத்தையங்கனையார் தங்கண்மேல்வைத்த
தயாவைநூறாயிரங்கூறிட்(டு)
அத்திலங்கொருகூறுன் கண்வைத்தவருக்
அமருலகளிக்குநின் பெருமை [(கு)
பித்தனென்றொருகாற்பேசுவரேனும்
பிழைத்தவைபொறுத்தருள்செய்யும்
கைத்தலமடியென்சென்னிமேல்வைத்த
கங்கைகொண்டசோளேச்சரத்தானே.

(ஷை கங்கைகொண்டசோளேச்சரம் செ. 8)

## வாயுசங்கிதை.

ஆங்கவனருளால்பத்திநன்குண்டாம்
பத்தியாலவனருளுண்டாம்
வீங்கியபத்திபற்பலபிறப்பில்
வேதங்களுரைத்திடும்படியே
தீங்கறுகருமம்இயற்றியபலத்தால்
சிவனருள்செய்திடவருமால்
ஓங்கியபத்தியால்சிவதருமம்
ஒழிவறப்புரிந்திடப்படுமால்.

புரிதலால்இறைவன்நல்லருள்புரிவான்
புரிந்திடப்போக்கறநின்ற
இருவினைகழியும்கழிந்திடமுத்தி
எய்தலாம்இறைவன்வார்கழலில்
ஒருவழிசிறிதுபத்திசெய்வோரும்
உற்றமுற்பிறப்பில்மேற்பிறப்பில்
மருவிடார்அங்கத்தோடுசேவித்தல்
மாசறுபத்தியாமென்பர்.

மேலே கூறிய பிரமாணங்களால் பத்தியோடு கூடிய வழிபாடுகள் புரிவோர் இறைவன் திருவருளுக்கு இலக்காகிச் சிவம் பேணும் வாய்மையான தவம் உடையராய் உய்தியடைதல் திண்ணம் என்பது நன்று பெறப்படும்.

இனி, சிவம் என்பது யாது? அச்சிவம் என்னும் செம்பொருள் காணப்படுதலும் பேணப்படுதலும் எவ்வாறு? அதனால் ஆம் பயன் என்னை? எனின் சிறிது கூறுதும்:

## திருவாசகம்.

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமல
[ரெழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
[அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்றபயனது நுகர்ந்திடும் பித்
[தர் சொற்றெளியாமே
அத்த னண்டுதன் அடியரிற் கூட்டிய அதி
[சயங் கண்டாமே.

(ஷை அதிசயப்பத்து செ. 9.)

என உரிய சாதகங்களால் தம்முள்ளே சிவத்தைக் கண்டு அச்சிவத்தைப் பேணி அச் சிவமேயாய்—சிவாங்கமாய் நித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியாராகிய மணிவாசக வள்ளல் அருளியவாறு நமது உள்ளும் புறம்புமாய் நிற்கும் அமல ஒளியே — அமல நிறையே சிவம் என்று கூறப்படும். அமல ஒளி அமல நிறை சத்துவம் சிவம் என்பன ஒன்றே. "வித்தகம்" தொகுதி 1 இல் இல 1, 2 இல் சிவம் என்பதன் இலக்கணம் நன்று விளக்கிக்கூறப்பட்டது. ஆங்கும் காண்க. குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் நமது உடலுள் காணப்படும் சிவம் என்னும் செம் பொருளானது, அவ் உடலுள் பூரணமாய்க் குடிபுகுந்து விமலமாய் அமலமாய் ஞானசத்திவடிவமான அவ் உடலேயாய் — ஈனமற்ற காயமாய் இருக்கும்படி செய்வதே சிவத்தைப் பேணுதலாகும். இதற்குரிய ஒழுக்கமே — தூலமும் சூக்குமமான பயில்வுகளே சிவம்பேணும் வாய்மையான தவமாகும் என்க.

## சிவவாக்கியர்பாடல்

சாமநாலு வேதமும் சகலசாத் திரங்களும்
சேமமாக ஓதினுஞ் சிவனைநீ ரறிகிலீர்
காமநோயை விட்டுநீர் கருத்துளே
[ உணர்ந்தபின்
ஈனமற்ற காயமா யிருப்பனெங்கள் ஈசனே.
சுற்றுமைந்து கூடமொன்றுசொல்லிறந்த
[தோர்வெளி
சத்தியுஞ்சிவமுமாகநின்றதன்மைஓர்கிலீர்
சத்தியாவதும்முடல்தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளறிந்திலீர்பிரானிருந்தகோலமே.

"காம நோயை விட்டு நீர் கருத்துளே உணர்ந்த பின்" என்பது நிறை முறையான இல்லற ஒழுக்கத்தால் — அருந்தல் பொருந்தல்களால் அசுத்த காமம் காதற்காமமாக மாற்றமடைதல். காதற்காமம் என்னும் சுத்த காமத்தால் அசைக்கப்பட்டு ஏகமாய் அம்பரமாய் ஒலிப்பது நாதம் — அமல நாதம் — ஏகஅம்பர நாதம்—ஏக அம்பர நாதன்—சிவன். வேத வடிவாகிய சிவம் என்னும் செம்பொருளைப் பேணும் தவநெறி இதுவே ஆம். இப்பெற்றி கைகூடப் பெற்ற மெய்யடியாரது ஈனமில் காயமாய் "ஈனமற்ற காயமாய்" இருப்பன் ஈசன் என்க. சிவம் பேணியதனால் ஆம் பயன் இதுவே ஆம். இன்னோர் அமல வடிவம் அருள் வடிவான சத்தியாக, அதனைப் பிரியாத உயிர் சிவமாகித் திகழும்—சிவாங்கமாகும் என்க. இது பற்றியே "சத்தியாவதும் முடல் தயங்கு சீவன் உட்சிவம்" என்று கூறப்பட்டது. "... அருள்வடிவதுவு மச்சிவத்தில் தெருள்வடிவான சத்தியாய் முன்போல் திகழும் என்று "அசி" உரைத்திடுமே" எனச் சுத்தசாதகம் (செ. 32) கூறியதும் அறிக. சத்தியும் சிவமுமாய்ப் பிரிபடாது பிரான் இருந்த கோலம் இதுவே என்க. இவ்வுண்மை அறியாத உலகமாக்கள் உடல் பிணமான பின் உயிர் அதனைப் பிரிந்து சிவமாகும் எனப் பிதற்றி உழல்வாராதலின் "பித்தர்காள் அறிந்திலீர் பிரான் இருந்த கோலமே" என்று கூறப்பட்டது. இத்தகைய நித்தியத்துவம் பெறுதற்குரிய வாய்மையான ஒழுக்கமே — சாதகமே வாய்மையான தவம் எனப்படுவது — சிவம் பேணும் தவம் எனப்படுவது என்க. குருவருளால் நிறை முறையான அருந்தல் பொருந்தல் அமையப்பெறாது —முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணிக்க

அறியாது உடலுயிரை வாட்டிச் செய்யும் ஏனைய தவங்கள் எல்லாம் சிவத்தைப் பேணி நித்தியத்துவம் அடையப்பெறும் சிவநெறியாகாது, அவம் பேணுதலால் பிறவி நெறியே காணும் அவநெறியாகிய சவ நெறியே ஆம் என்பது தத்துவப் பெரியார் துணிபும் வேத உண்மையும் ஆம். பின் வரும் பிரமாணங்கள் இவ்வுண்மையை நன்று வலியுறுத்து வனவாகும்.

## திருவாசகம்.

"................................................
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்."

(ஷை திருவண்டப்பகுதி.)

புற்று மாய்மர மாய்புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணு மன்ன..."

(ஷை செத்திலாப்பத்து செ. 2)

## திருவாய்மொழி.

ஊன்வாடவுண்ணாதுயிர்காவலிட்
டுடலிற்பிரியாப்புலனைந்தும்நொந்து
தாம்வாடவாடத்தவஞ்செய்யவேண்
டாதமதாஇமையோருலகாளாகிற்பீர்
கானுடமஞ்ஞைக்கணமாடமாட
கயலாகொணீர்ப்பழனம்புடைபோய்த்
தேனுடமாடக்கொடியாடுதில்லைத்
திருச்சித்திரகூடஞ்சென்றுசேர்மின்
களே.

[இமையோர் உலகு — ஞானக் கண்ணுடைய — இமையா நாட்டமுடைய மெய்யடியார்க்குரிய பொன்னுலகம் — சிவலோகம். "அமரருலகு அளிக்கு நின் பெருமை" வழியடியார் பொன்னுலகம் பெறுதல் "தொண்டனேன் இன்றுகண் டொழிந்தேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கூறியனவும் அறிக. இதனுல் வழியடியாரே வானவர் — இந்திரர் — குபேரர் என்பது வெள்ளிடை ஆம். இவற்ருல் உடலுயிரை வாட்டிச் செய்யும் தவம் சிவத்தைப் பேணுதற்குரிய வாய்மையான தவமல்ல என்பது நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

## திருமந்திரம்.

அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலார்
அஞ்சு மடக்கு மமரரு மங்கிலை
அஞ்சு மடக்கில சேதன மாமென்றிட்
டஞ்சு மடக்கா அறிவறிந் தேனே.

(ஷை 7-ம் தந். ஐந்திந்திரிய மடக்கு
முறைமை செ. 3)

எண்ணு யிரத்தாண்டு யோக மிருக்கினும்
கண்ணு ரமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி யுள்ளே ஒளிபெற நோக்கிடில்
கண்ணாடி போலே கலந்தி ருந்தானே.

(ஷை 3-ம் தந். 7வது தியானம் செ. 6)

## கந்தரலங்காரம்.

துருத்தியெனும்படிகும்பித்துவாயுவைச்
சுற்றிமுறித்
தருத்தியுடம்பையொறுக்கிலென்னுஞ்சிவ
யோகமெனும்
குருத்தையறிந்துமுகமாறுடைக்குருநாதன்
சொன்ன
கருத்தைமனத்திலிருத்துங்கண்டீர்முத்தி
கைகண்டதே.

(ஷை செ. 71.)

சிவம் பேணிய பெரியார் அருளிய இவ் அநுபவத்திருவாக்குக்களால் உடம்பை வாட்டி வருத்துவோரும் ஐம்பொறிகளையும் தம் தம் புலன்களில் நிறை முறையோடு செலுத்தி அவற்றைத் தூய்மை செய்யாதவரும் சிவம்பேணும் தவமுடையரல்லர் என்பதும், அசேதனமாய் மாண்டு போவதே யன்றி நித்தியத்துவம் பெறமாட்டார் என்பதும் நன்று வலியுறுகின்றன. உலகர் போல் வாழ்ந்து ஒப்புர வொழுகும் மெய்யடியார்க்குரிய சிவயோகமே — இயற்கை நிட்டையாகிய சகச நிட்டையே சிவம் பேணும் தவமாகும். இவ்வுண்மைகள் எல்லாம் இதுவரை "வித்தக" வாயிலாக வெளி வந்த கட்டுரைகள் பலவற்ருல் நன்று விளக்கி நிறுவப்பட்டன ஆதலின், ஈண்டும் விரித்தல் மிகையாகும்.

சிவம் பேணிய பெரியாராகிய தத்துவப் பெரியாரே செயற்கரியன செய்யும் அளப்பில் ஆற்றல் உடையவரும் ஆவர்.

"சிவமெனும்பொருள்ஆதிசத்தியொடு
சேரினெத்தொழிலும்வல்லதாம்"

என்னும் மறைமொழியும் இவ் அரிய பெரிய உண்மையையே உணர்த்தி நின்றது. சத்தி அம்சமாகிய உடலும் சிவாம்சமாகிய உயிரும் தூய்மையடைந்து ஒழிவற ஒன்றுதலே — உடலில் எம்பெருமான் குடிபுகப் பெறுதலே சிவம் பேணப்படுதல் என்பதன் உண்மையாகும். கபிலை முதற்குரவனுகிய சற் குருநாதன் அருளால் பெறப்படும் வாய்மையான சாதகங்களாற்றான் சிவம் பேணுதற்குரிய வாய்மையான தவம் கைகூடப் பெறவேண்டும். இயற்கையோடு ஒத்து நின்று ஒப்புர வொழுகி — முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்து — உறவுபடுத்தி, அழுக்கை அழுக்கால் அகற்றும் உபாயம் போல நிறை முறையான அருந்தல் பொருந்தல்களாகிய தூலப் பயில்வுகளாலும், திருவருளுட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சூக்குமமான பயில்வுகளாலும் உடலுயிரில் உள்ள அழுக்கை — அசுத்த நிறையைக் கழிக்க வேண்டும்; அமல ஒளியை ஆக்கமுறச் செய்ய வேண்டும்; படிற்றுக்கையை விட்டு எம் பெருமானைப் பூண வேண்டும் — பேண வேண்டும் — சிவத்தைப் பேண வேண்டும் என்க. அசுத்த நிறை கேடடைய அமல நிறையாகிய அமல ஒளி என்னும் சிவம் உடலகத்து ஆக்கமுறுதலே சிவம் பேணுதல் என அறிதற்பாற்று. இது பற்றியன்றே,

## திருவாசகம்.

"...படிற் றுக்கையை விட்டுனைப்
பூணு மாறு அறியேன்..."

(ஷை திருச்சதகம் செ. 44)

எனவும்,

“காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்”

(ஷை செத்திலாப்பத்து செ. 5)

எனவும் உண்மை கடைப்பிடித்து உய்யும் வண்ணம் அருளியது, காய மாயம் கழிந்து சிவம் பேணுதலால் நித்தியத்துவம் பெற்ற மணிவாசக சிவம் என அறிதல் வேண்டும். காய மாயம் கழிந்தாலன்றி — மாயையாகிய கதவு திறக்கப்பட்டாலன்றி — துரக்கப்பட்டாலன்றி வேறு எவ்வாற்றானும் அஃதாவது சீவர்கள் தமது முனைப்பால் கண்டு பிடிக்கும் எவ்வகையான தந்திர மந்திர யோக சமாதிகளாலும் குட்டிக் கரணங்களாலும் சிவம் காணப்படுதலும் பேணப்படுதலும் முற்றுக முடியாத காரியமே ஆகும். சிவம் பேணுதற்குரிய — சிவம் என்னும் அமல ஒளி உடலகத்து ஆக்கமுறுதற்குரிய அரிய தவமே பின் வரும் தேவர் திருவாக்கால் கூறப்பட்டதும் ஆம்.

## குறள்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந்
[துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

(ஷை 27-ம் அதி. தவம் செ. 7)

வினை ரூபங்களாகிய கோரணிகளான் உளவாகும் துன்பம் தம்மை வருத்த வருத்த அவற்றைப் பொறுத்துத் தவம்புரியும் ஆற்றல் உடையார்க்கு, தீயின் கண் உருக வைத்த பொன்னானது அத் தீ சுடச் சுடக் களிம்பு நீங்கி ஒளி மிகுமாறு போல, தமது உடலுயிரில் உள்ள அசுத்தம் நீங்கி அமல ஒளியாகிய சிவம் ஆக்கமுறும் என்பது இதன் பொருளாகும். முன்னிலைக் கோரணிகளால் வரும் துன்பங்களைப் பொறுத்து அவற்றை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால் உடலுயிர் அமலமடைந்து ஒழிவற ஒன்றுதலால் ஞான சத்தி வடிவம் ஆக்கமுறும் பெற்றி — சிவம் பேணப்படும் பெற்றி — உடலில் குடிபுகும் பெற்றி இதுவே என்க. இத்தகைய வாய்மையான தவமுடையவனே தன்னுயிர் தானறப் பெற்றவன் — தனது உயிராகிய சீவன் சிவனாகிய சிவம் தனக்கு உரியதாக உடலை விட்டுப் பிரியாது நிலைக்கப் பெற்றவன்; காலனை வென்று — விதியை வென்று நித்தியத்துவம் பெறுதற்கு உரியவன் — தனது உடலில் சிவம் குடிபுகப் பெற்றவன் — சிவம் பேணிய பெரியான் என்க. இவனை மற்றைய உயிரெல்லாம் தொழும் — சீவர்கள் எல்லாம் வணங்குவார்கள் — மூவுலகும் கைகூப்பித் தொழும் என்க.

## குறள்.

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்ற
[லின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

(ஷை 27-ம் அதி. தவம் செ. 8, 9.)

[கூற்றம் குதித்த்ல் — யமனை வெல்லுதல் — விதியை வெல்லுதல் — மரணத்தைக் கடந்து நித்தியத்துவம் பெறுதல். நோற்றலின் ஆற்றல் தலைப்படல் — தவத்தால் சிவம் பேணப்படுதல்.]

முன்னிலையில் பூசனைகள் உபாசனைகள் எத்துணையாக உஞற்றப்படினும் உரிய சாதகங்களால் அமல ஒளியாகிய — அமல ஒலியாகிய சிவம் ஆக்கமுறும் பெற்றி — பேசும் பெற்றி கைவரப் பெற்றாலேயன்றி; தன்னிலை முன்னிலை எங்கணும் சிவம் பேணப் படுதலும் பேசும் பெற்றி அமைதலும் முடியாத காரியமே ஆகும். இப்பெற்றி கைவரப் பெறாது — கைவரப் பெறுதற்கு ஏற்ற தவம் புரிய அறியாது இடுகுறியான ஆலய மூர்த்தங்களையும் அவற்றிக்கு உஞற்றப்படும் வழிபாடுகள் முதலிய கற்பனைகளையுமே வாய்மை எனத் துணிந்து உண்மையை நாடும் ஆற்றலும் காதலும் இன்றி அமைவோர்க்கும், இத்தனகப போலியான வழிபாடுகளையும் போலி நிட்டைகளையும் உடையோரையே சிவம் பேணிய பெரியார் எனவும் மெய் கண்ட மேலோர் எனவும் மயங்குவோர்க்கும் உண்மையை உணர்த்துதற் பொருட்டே சிவம் பேணிய பெரியாராகிய மெய்யடியார் பின் வருமாறு அருளிச் செய்வாராயினர்.

## அப்பர் தேவாரம்

தங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறையாடிலென்
ஓங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீசனெனாதவர்க்கில்லையே.

(ஷை பாவநாசத்திருக்குறுந்தொகை. செ 2)

[“எங்கும் ஈசன் எனாதவர்” — தன்னிலையில் சிவம் காணப்பட்டுப் பேணப்படுதலால் முன்னிலை எங்கணும் — யாண்டும் சிவமே காணும் சகச நிட்டையை அறியாதவர். சர்வாதிஷ்டானமாய் விளங்குவது சிவமே என அம்முதற் பொருளையே தன்னிலை முன்னிலை எங்கணும் கண்டு பேணி நிற்கும் சகச நிட்டையாளர்க்கேயன்றி, சுட்டுணர்வு கொண்டு அச் சிவ பரம் பொருளை ஏகதேசத்துக் கண்டு அமைவார்க்கு நித்தியத்துவம் அமைய முடியாது என்பது இதனால் வலியுறுத்தப்பட்டது. தீர்த்தம் எனவே அதனோடு தொடர்புடைய மூர்த்தி வழிபாடும் கூறப்பட்டது.]

## சிவவாக்கியர்பாடல்

நட்டகல்லைத்தெய்வமென்று நாலுபுட்பஞ்
[சாத்தியே
சுற்றிவந்துமொணமொ ணென்றுசொல்லு
[மந்த்ரமேதடா
நட்டகல்லும்பேசுமோ நாதனுள்இருக்கை
[யில்
சுட்டசட்டிசட்டுவங் கறிச்சுவையறியுமோ.

கழுத்தையும் நிமிர்த்திநல்ல கண்ணையும்
[விழித்துநீர்
பழுத்துவாய் விழுந்துபோன பாவமென்ன
[பாவமே

அழுத்தமான வித்திலே யநாதியா இருப்பதோர்
எழுத்திலோ எழுத்திலே இருக்கலாம் இருந்துமே.

மாற்றிப் பிறந்து சிவம் பேணி நிற்றலால் தன்னிலை அமலமடைந்தபோது தான் வாய்மையான மூர்த்தி, தலம், தீர்த்தம் அடையப்படும். நிறை முறையான அருந்தல் பொருந்தல்களால் அசுத்த காமமானது சுத்த காமமாக — காதற்கரமமாக மற்றமடையவேண்டும். அப்பொழுதுதான் தன்னிலையில் சிவம் பேணப்பட்டு அச்சிவம் என்னும் நாத வேதம் — அமல ஒலி — ஏக அம்பர நாதம் — நாதன் பேசும் பெற்றி அமையும். இப்பெற்றி கைவரவேண்டும் என்றே,

## திருவாசகம்.

"பிரைசேர் பாலில் நெய்போலப் பேசா திருந்தால் ஏசாரோ."

(ஷை கோயின்மூத்ததிருப்பதிகம் (செ. 5)

என அருளிச் செய்தனர் மணிவாசக பிரபு. தன்னிலையில் ஒலியாகிய நடனம் காணப்படாதபோது அதனை முன்னிலையில் காணுதல் அசம்பாவிதமே ஆகும்.

"அத்தன்ஆடல்கண்டபின் அடங்கல்ஆடல் காணுமே"

என்றனர் சிவ வாக்கியர்.

தன்னிலையில் சிவம் பேணப்பட்டு பேசும் பெற்றி அமையாதபோது முன்னிலையில் உள்ள நட்டகல்லுக்கு — சிலா விக்கிரகத்துக்குப் பேசும் பெற்றி அமைய முடியுமா? தன்னிலை எவ்வாறு அமைந்ததோ அவ்வாறு அமைந்ததே முன்னிலையும் ஆம். ஒருவர் உடலகத்து மறைபொருளாய் இருந்த சிவம் ஆக்க முற்றுப் பேசும் காலமே முன்னிலையிலும் பேசும் காலமாகும் "நாதன் உள் இருக்கையில்" — அஃதாவது நாத வடிவாகிய சிவம் — ஏக அம்பரநாதன் பேணப்படாது — ஆக்கமுறாது — பேசாது மறைபொருளாய் உள்ளே இருக்கும் போது நட்டகல்லும் பேசுவது எப்படி? உற்ற "ஆக்கையின் உறுபொருள்" ஆகிய — அகத்தே வித்தாயுள்ள சிவம் நம்முள்ளே காணப்பட்டுப் பேசும் வரை முன்னிலை விக்கிரகம் பேசுமா? பேசினது என்றால் பேசும் என்றால் அஃது இயற்கை விரோதமான பொய்க் கூற்றே அன்றி வேறு என்னை? இது பற்றியே "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்" என்றார். முன்னிலை விக்கிரகம் பேசுதலாகிய அரிய பேறு சிவம் பேணப்பட்ட விமல தநுவுடைய — மாற்றிப் பிறந்த மெய்யடியார்க்கே யன்றி எம் போலிய மருளுடம்புடைய உலக மாக்களுக்கு உரியதாகுமா? இத்தகைய பேறுடைய சிவம் பேணிய மெய்யடியார் எம்போலிய மருளுடம்பினர் போலத் தமது தூலம் நிலத்துட் புதைக்கும்படியும் சுட்டு எரித்து விடும்படியும் இறந்து பிறவி வலைப்படுபவர் ஆவரோ? ஆகார் என்பது தத்துவப் பெரியார் துணிபும் வேத உண்மையும் ஆம் அல்லவா? உண்மை இவ்வாறாக, பிணமாகி நிலத்துட் புதைக்கப்பட்ட மருளுடம்பினர் சிலரைச் சிவம் பேணிய பெரியார் எனவும், இவரோடு கோயிற் சிலாவிக்கிரகம் பேசியது எனவும், அவ்விக்கிரகம் அவருக்குச் சில நூல்களைப் பாடஞ் சொல்லி விளக்கிவிட்டது எனவும், அவர் படைத்த நைவேத்தியங்களைச் சாப்பிட்டு விட்டது எனவும் விளம்பி விட்டாரும் உளரே எனின், அது வேத உண்மைகளையும் மெய்யடியார் நீர்மையையும் இயற்கையின் திறனையும் ஒரு சிறிதும் அறியாதார் பொய்க் கூற்றே — அபிமானம் பற்றிய குருட்டுத்தனமான போலிக் கூற்றே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை என்க. காய்தல் உவத்தல் அகற்றி அபிமானப் பேயால் ஆவேசிக்கப்படாது உண்மையை நாடுவார்க்கு அவ்வுண்மை புலப்படாததாகுமா? ஆகாது என்பது வெள்ளிடை. "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்" என்பது போல உண்மை நிலை நோக்கி உண்மையை உரைத்தமையால் இப்பெரியார் எல்லாம் ஆலய வழிபாடு முதலிய கற்பனைகளை இகழ்ந்தவராவரோ? எனின், அன்று! அன்று! மற்றோ, கற்பனை வாயிலாக உண்மையை நாடி உய்தியடையாது அக்கற்பனையையே உண்மை என அமைந்து அவநெறிக்கே ஆளாகும் மூடக் கொள்கையையே கண்டித்து உண்மையை நாடி உய்தியடையச் செய்தவரே யன்றி வேறல்ல. அன்னார், கற்பனைகள் சீவர்கள் உய்வுக்கு, அவர்கள் பக்குவத்துக்கு ஏற்றவாறு, இன்றியமையாதன என அவற்றைப் புகழ்ந்து வற்புறுத்திய இடங்களும் உண்டு. ஆதலால் சீவகாருண்ணிய மூர்த்திகளாகிய சித்தர்கள் நோக்கத்தை அறியாது அவரைக் குறை கூறுவது பாதகமே யாகும்.

மேலே கூறியவாற்றால், சிவம் பேணாது அஃதாவது நமது உடலகத்துச் சிவம் என்னும் செம் பொருளை ஆக்கமுறச் செய்யாது உஞற்றப்படும் வழிபாடுகள் — விரதங்கள் — பூசனைகள் — உபாசனைகள் — போலி நிட்டைகள் — யோகங்கள் — தவங்கள் உண்மைப் பயன் அளிப்பன ஆகா என்பது — அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை அளிப்பன ஆகா என்பது வெள்ளிடை மலை போல விளங்கி நிற்றல் கண்டு கொள்க. சிவம் பேணாது உஞற்றப்படும் தவ நெறி அவநெறியாகிய சவ நெறியே அன்றிச் சிவ நெறியாகாது என்க. இவ்வாறு சிவம் பேணாது செய்யப்படும் தவத்தால் உண்மைப் பயன் அடைய முடியாது. ஆதலால், குருவருளால் சிவம் பேணும் வாய்மையான தவமே செயற்பாலது என ஒன்றும்போதா அறிவிலிகளாகிய நமக்கு அறிவித்தற் பொருட்டே, சிவம் பேணிய அருந்தவமுடையளாய் நித்தியத்துவம் பெற்ற நமது பாட்டி,

# பரிபாடற் சிறப்பு.

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன், வித்துவான் ப்ரம்மஸ்ரீ. சி. கணேசையர், அவர்கள் எழுதியது.

## ஒன்பதாம் பாடல்.

இதன் கண் முருகவேள் இரு சத்திமாரோடும் பறங்குன்றின் கண் ஊடியுங் கூடியும் போக நுகர்ந்து, விளையாடுவதாகக் கவி புனைந்துரைக்கின்ற பொருள் மிகவுஞ் சிறந்து காட்டலின் அதனை யாம் ஈண்டு எடுத்துக்காட்டுதும்.

**முருகனோடு தேவ சேனை ஊடல்.**

வள்ளியைத் தமிழ் மணமுற்று வந்த முருகன், தன்னை யணைய வரும் போது, தேவ சேனை அவனைத் தொழுது நோக்கி, எம்மை யொத்த மகளிர் அழகில்லாதார். வஞ்சனே! நின்னை யறியாது அகப்பட்ட மகளிர் திறம் இனி மழை பெய்ய வேண்டி வருந்துங் காவை யொக்கும். (என்றது முன் மழை பெய்தலால் தழைத்த சோலை, பின், மழை துறத்தலால் பின்னுந் தன் தழைவுக்கு மழையையே வேண்டி வருந்துதல் போல உனது இன்பம் பெற்ற யான் உன்னைப் பிரிதலால் வருந்தி வாடிய யான் அவ்வருத்தந் தீர உன்னையே காத்திருந்து வருந்த வேண்டியதா யிற்று. என்பது கருத்து) ஆதலால் நின் கண் அகப்பட்ட அம்மகளிரே தவறுடையரல்லது நீ தவறுடையையல்லை. நின்னை எய்துந் திருவுடையார் தோண்மேல் தங்கி இன்பம் நல்கலும் நினக்கின்று. ஆதலால் நின் மாணலம் உண்ணக் கடவேனோ? யான், என்று தன்னைச் சுட்டிக்காட்டி வெகுளி மிக்க நோக்கத்துடனே, அவன் கொண்டு வந்த பெண்டு காரணமாக உண்டான வெகுளியால், அவன் புல்லுதற்கு இணங்காது அவனைக் கடந்து மீறிச் சென்றாள்.

**முருகன் தேவ சேனையை ஊடல் தீர்த்தல்.**

முருகன் தன்னோடு இணங்காது தன்னைக் கடந்து சென்ற தேவ சேனையாகிய அரசிக்குத் தன் வணக்கமாகிய திறையைக் கொடுப்ப (என்றது அவளை அடிபணிந்து ஊடலைத் தீர்ப்ப என்றபடி) அப்பொழுது தேவசேனை தன் வெகுளி தீர்ந்து அவனை வருந்தற்க என்று தன் மார்பை அளிப்ப, (என்றது அவன் புல்லுதற்கு இணங்க என்றபடி.)

**முருகனோடு வள்ளி ஊடுதல்.**

அத்தேவ சேனை மார்பை முருகன் புல்லுதலைக் கண்ட வள்ளி வெகுண்டு அவனைப் புல்லல் என்று அவன் கையை இறுக யாத்துத் தன் கூந்தற் கோதையைப் பறித்து அதனையே கோலாகக் கொண்டு புடைப்ப, (வள்ளி தேவ சேனை என்னும் இருவருக்குங் கலகமுண்டாயது. அங்ஙனந் தலைவியர் இருவர்க்குங் கலகமுண்டாய பொழுதே அவர் பொருட்டாக அவர் பரிவாரங்களுக்குங் கலக முண்டாயது.

**தலைவியர் பொருட்டுப் பரிவாரங்கள் தம்முட்கலாம் விளைத்தல்.**

எங்ஙனமெனில், ஒருவர் மயிலோடு ஒருவர் மயில் எதிர்ப்ப, அதனைக்கண்டு இருவர் கிளியும் தம் நிரம்பா மொழிகளால் ஒன்றை யொன்றுவைய, அப்பொழுது வள்ளி கொண்டையில் வண்டு தேவ சேனையின் கொண்டை வண்டின் மேற் சென்று பாய்ந்தது. அங்ஙனம் வண்டுகள் சண்டை செய்வதைக் கண்ட தேவ சேனை பாங்கியர் வள்ளி பாங்கியரோடு மாறுபட்டுத் தாரையுந் தாரையும் பிணக்குவாரும் (என்றது தாராலே யொருவரை யொருவர் அடிப்பார் என்றபடி) கண்ணிகளைப் பறித்து ஒருவர் மேல் ஒருவர் எறிவாரும், கொங்கைகளின் மேல் அணிந்த வாரை மத்திகையாகக் கொண்டு புடைப்பாரும், (மத்திகை—குதிரைச் சம்மட்டி) கோதைகளையும் பந்துகளையுங் கொண்டு எறிவாருமாக, இங்ஙனம் வள்ளி பாங்கியரோடு தேவ சேனை பாங்கியர் மெல்லியரா யிருந்தும் போரை மேற்கொள்ள, அப்பொழுது வள்ளி பாங்கியர் (கோப மிக்கு அதிரப் பொருவாராய்க்) களிற்றியல்பைத் தம்பாற் கொண்டு பொருவாரும், குதிரைகளின் கதியோடு வருவாரும், வடிகயிற்றைத் தெரிந்து

கொண்டு தேரணி போல வருவாரும், கண்களாகிய அம்புகள் மார்பையுறப் புருவங்களாகிய வரிசிலைகளை வாங்கு வாரும், வாட்போர் வீரர் போல மறலு வாரும், தோள்வளையாகிய சக்கரப் படையைச் சுழற்றுவாருமாக, இங் ஙனம் வள்ளி பாங்கியர் அதிரப் பொரலால் தேவசேனை பாங்கியர் அஞ் சிக் கலக மிடுவதை விடுத்து, முரு கனை (யடைக்கலம் புக்குச்) சூழ்ந்து கொண்டு சுனையாடுவாரும், யாழைப் பாடுவாரும், மயில் போல நின்று ஆடு வாரும், குயில் போலக் கூவுவாரும், ஆர வாரஞ் செய்வாருமாக, இங்ஙனம் முருக வேள் இருவரோடும் ஊடியுங் கூடியும் போகம் நுகர்தற்கு இடமாய் இருந்தது திருப்பரங்குன்று என்க.

விளையாடுவோர் வென்றிக்கொடி நாட்டும் மரபு.

இனி அம்மலையின்கண் நிகழும் பல் வகை விளையாட்டியல்புகளை இக்கவி கூறுகின்றார். எங்ஙனமெனில்; ஆடல் பயின்றாரை அவ்வாடல் வல்லார் வெல் லவும், யாழ்ப்பாடல் வல்லாரை யாழ்ப் பாடல் வல்லார் வெல்லவும், சூதாடல் வல்லாரைச் சூதாடல் வல்லார் வெல் லவும், ஒழிந்த பயிற்சிகளிலும் அவ்வப் பயிற்சியில் வல்லாரை அவ்வப்பயிற்சி யில் வல்லார் வெல்லவும், சுனையின் பக் கத்தே அவ்வவ் வென்றிக் கொடிகள் உயர்த்தப் பட்டு நின்றன, (கொடி தொகுதி யொருமை) என்னுங் கருத் தமைய:

"கடுஞ்சூர் மாமுத றடிந்தறுத்தவே
லடுபோராள நின் குன்றின்மிசை
யாடனவின்றோ ரவர்போர் செறுப்பவும்
பாடல்பயின் றோரைப் பாணர் செறுப்பவும்
வல்லாரை வல்லார் செறுப்பவு
மல்லாரை யல்லார் செறுப்பவு மோர்செல்
[லாய்ச்
செம்மைப் புதுப்புனற்
றடாக மேற்ற தன்சுனைப் பாங்கர்ப்
படாகை நின்றன்று."

எனக் கூறியது மிகவுஞ் சிறப்புடைத் தாகக் காண்கிறது.

---

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

"சிவத்தைப்பேணில் தவத்திற்கழகு"

என உண்மை நிலைக்கு ஒப்பியவாறு உரைத்தருளினள் என அறிக.

மெய்கண்ட மேலோராகிய சிவம் பேணிய அருந்தவமுடையார் விமல தேகம் – பொன்மயமான ரக்ஷகதேகம் (சிவபிரான் பொன் வண்ணர் என்பது சுருதி) நாதசரீரமாய்—அள்ளுருக்கை யாய்— அமல வடிவாய்—பிரணவவடி வாய் — அருளாய் வெளியாய் உலகு கண்டிட மறைவதேயன்றி, சிவம் பேணும் தவமறியாத போலி நிட்டை யாளர் — உலகமாக்கள் சரீரம் போல நிலத்துட் புதைக்கும்படியும் நெருப் பால் எரித்து விடும்படியும் பிணமாகி விழும் என்று நினைக்கவும் சொல்லவும் படுமா? சிவம் பேணப்பட்ட அமல தநுவை விட்டுச் சிவம் பிரியுமா?

"புறப்பட்டுப்போகான்புரிசடையோனே"

என்றனர் திருமூலர் அல்லவா?

"ஈனமற்றகாயமாய்இருப்பன்எங்கள்ஈச
[னே"

என்றனர் சிவவாக்கியர் அல்லவா? மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் "சிவத் தைப்பேணில் தவத்திற்கழகு" என்னும் ஔவையார் அமுத வாக்கு உலகிய லுக்கும் உண்மை நிலைக்கும் உரியதாய் நிற்றலும் உண்மைப் பொருளின் அருமை பெருமையும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

---

## பிழை திருத்தம்.

"வித்தகம்" தொகுதி 2 இல. 25.

| பக்கம். | பிரிவு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 3 | 2 | 31 | இன்றியமையும் | இன்றியமையாமையும் |
| | | ஷை | ஷை இல. 26. | |
| 3 | 1 | 5 | மாக்கள் | மக்கள் |
| ,, | 2 | 23 | வைத்தனள் | வைத்தனர் |
| 7 | 2 | 3 | சத்திநிபாதம் | —சத்திநிபாதம் |
| 8 | 1 | 2 | என்பதும் | என்பது |
| ,, | 2 | 2 | இனிததூம் | இனிததூஉம் |

Imprimerie "VITTAGAM" — Pondichéry. Le Directeur-Gérant. R. Nagarattinam.